on the head with his slipper.— The grocer went and made his complaint to the Cutwal, who sent for the Dirveish, and asked why he had struck the man. He answered, because he had received foul language from him. The Cutwal said, "O Dirveish! "you have been guilty of a great "offence; but you are a Fakeer, "and therefore I do not punish "you: go away, and give eight "annas to the grocer, which is "equivalent to your fault." The Dirveish took a rupee out of his pocket, and put it into the Cutwal's hand, and, striking him a blow on the head with his slipper, said, "If such is justice, take you "eight annas, and give eight an- "nas to the grocer."

தலையின்மேல் அடித்தான் அவ்வர்த்தகன் கொத்தவாலிடத்திலே போய் முறையிட்டுக்கொண்டான் கொத்தவால் அந்தச் சன்னியாசியை அழைப்பித்து ஏன் அவனை அடித்தாயென்றுகேட்டான் சன்னியாசி அவன் என்னைத்திட்டினபடியால் அடித்தேனென்றுமறுமொழிசொன்னான் கொத்தவால் ஓ சன்னியாசியே நீ பெரியகுற்றஞ்செய்தாய் ஆகிலும் நீ பக்கிரியாயிருக்கிறபடியால் நான் உன்னைத்தண்டிக்கவில்லை போய்விடு இந்தவர்த்தகனுக்கு எட்டு அணாகொடு அதுவே உன்குற்றத்திற்குத்தகுமான தண்டனையென்றான் அச்சன்னியாசி தன் சட்டைப்பையிலிருந்து ஒருரூபாய் எடுத்து அதைக்கொத்தவால் கையிலே கொடுத்துத் தன் பாதரட்சையினால் அவன் தலையின்மேலே ஓரடி அடித்து நீதியானது இத்தன்மையாயிருக்குமாகில் நீ எட்டு அணா எடுத்துக்கொண்டு அவ்வர்த்தகனுக்கு எட்டு அணாகொடுவென்றான்.

STORY XLVII.

A painter went to a stange city, where he began to practise physic. Some time after, a countryman of his came there, and asked him what profession he now

௪௭. கதை.

ஒரு சித்திரக்காரன் ஓரன்னியபட்டணத்திற்குப் போய் அவ்விடத்தில் வயித்தியத்தை அப்பியாசிக்கத்தொடங்கினான். சில நாளிற்குப் பின்பு இவனுடைய தேசத்தான் ஒருவன் அங்கே வந்து இவனை நீ இப்போது என்னதொழில் செய்கிறாயென்று கேட்டான் இவன் வயித்தியத் தொ

followed. He answered, physic. The other asked, why? and he replied, "Because, If in this art "I should commit a fault, the "earth hides it."

ழிற் செய்கிறேனென்று மறுமொழி சொன்னான் அவனேன் (அதைச் செய்கிறாய்) என்று கேட்டான் இவன் நான் இந்தத் தொழிலில் ஒரு குற்றஞ் செய்தால் அதைப் பூமியானது மறைத்துப் போடுகிறது ஆதலால் அதைச் செய்கிறேனென்று மறுமொழி சொன்னான்.

STORY XLVIII.

An indigent poet paid a visit to a richman, and seated himself so near that there was not more distance than a span between them. The rich man, offended thereat asked him, "What difference is "there between you and an ass?" He answerd, "The measure of "one span." The other was very much confounded at this answer, and made an apology.

௪௮. கதை.

தரித்திரனாயிருக்கிற ஒரு கவிராயன் ஒரு தனவானிடத்திற்குப் போய்த் தனக்கும் அவனுக்கும் ஒரு சாணுக்கு அதிகமாயிராத அவ்வளவு சமீபத்திலே உட்கார்ந்தான் அதினாலே அந்தத் தனவான் கோபங்கொண்டு அவனை உனக்குங் கழுதைக்கும் எவ்வளவு வித்தியாசமிருக்கிறதென்று கேட்டான் அவன் ஒருசாணளவென்று மறுமொழி சொன்னான் தனவான் இவ்வுத்தரவினாலே மிகவுங் கலங்கி அதற்குப் பரிகாரஞ் சொல்லிக்கொண்டான்.

STORY XLIX.

A beggar went to the gate of a rich person, and asked for something. Some one cried out from within, "Madam is not at home." The beggar returned, "I asked "for a bit of bread, not for a lady, "that I should find such an an"swer."

௪௯. கதை.

ஒரு பிச்சைக்காரன் ஒரு தனவானுடைய வீட்டு வாசற்படியினிடத்திற்குப் போய்க் கொஞ்சம் பிச்சை கேட்டான் உள்ளேயிருந்து எவர்களோ அம்மாள் வீட்டில் இல்லையென்று கூவினார்கள் அப்பிச்சைக்காரன் இப்படிப்பட்ட உத்தரம் நான் அடையவேண்டியதென்னத்துக்கு நான் ஒருதுண்டு ரொட்டி கேட்டேனேயல்லாமல் ஒரு ஸ்திரீயைக் கேட்கவில்லையே யென்று மறுமொழி சொன்னான்.

STORY L.

A King sent for a certain learned man, and said, "I want to "make you Cazy of this city." He answered, "I am not fit for "the office." The King asked him, why? and he replied, "If "what I have spoken is true, I "thereby stand excused; and "if I have uttered a falsehood, "then it is not adviseable to "make a liar a Cazy. The King approved of his apology, and excused him.

௫௰. கதை.

ஒரு ராஜன் கல்விமானொருவனை அழைப்பித்து நான் உன்னை இப்பட்டணத்திற்கு நியாயாதிபதியாகச்செய்ய வேண்டுகிறேனென்றான் அவன் நான் அந்தஉத்தியோகத்துக்குப்பாத்திரன் அல்லனென்றான் அரசன் அவனையென்னத்தினாலேயென்று கேட்டான் அவன் நான் சொன்னது உண்மையானால் என்னை மன்னிக்க வேண்டும் நான் பொய் சொன்னேனாகில் பொய்யனை நியாயாதிபதியாகச் செய்தல் தகுதியன்றென்றான் அரசன் அவன்போக்கையேற்றுக்கொண்டு அவனையனுப்பித்தான்.

STORY LI.

Once on a time, an Ameer was shooting an arrow at a mark. Many archers were then present, but no one's arrow hit the mark. A Fakeer happened to come there, and asked some charity. The Ameer put into the Fakeer's hands his own bow and arrow, and ordered him to hit the mark. The Fakeer took aim at the mark and accidentally hit it. The Ameer was very much pleased, and bestowed on the Fakeer an

௫௧. கதை.

முற்காலத்தில் ஒரு அமீரானவன் ஒன்றைக்குறியாகக்கொண்டு அம்பெய்தான் அப்பொழுது அநேகவில்லுக்காரர்கள் கூடவிருந்தபோதிலும் ஒருவனுடைய அம்பும் அக்குறியின்மேல் படவில்லை ஒரு பக்கீரானவன் தற்செயலாய் அங்கேவந்து கொஞ்சம்பிச்சைகேட்டான் அந்த அமீரானவன் தன்வில்லையும் அம்பையும் அந்தப்பக்கீரியினுடைய கையிற் கொடுத்து அக்குறியை எய்யென்றான் பக்கீர் அக்குறியைப்பார்த்து எய்ய அது தற்செயலாய்ப்பட்டது அமீரானவன் மிகுந்த சந்தோஷப்பட்டு அப்பக்கீர்

hundred rupees, and told him to depart. The Fakeer said to the Ameer, "I begged, and obtained "nothing." The Ameer put on an angry countenance, and said "I bestowed on you an hundred "rupees, and you say you have "obtained nothing; what words "are these?" The Frkeer answered, I received an hundred "rupees for having hit the mark; "but what have I got by my beg-"ing?" The Ameer laughed, and bestowed on him a further gift.

க்கு நூறுரூபாய்க்கொடுத்து அவனை ப்போகச்சொன்னான் பக்கிரி அந்த அமீருடனே நான் பிச்சைகேட்டதற்கு ஒன்றும் அடையவில்லையே யென்றான் அமீரானவன் கோபமானமுகத்துடனே நான் உனக்கு நூறுரூபாய் கொடுத்தேனே உனக்கு ஒன்றுங்கிடைக்கவில்லையென்று நீ சொல்லுகிறாயே இதுஎன்னவார்த்தை யென்று சொன்னான் அதற்கு அப்பக்கிரி நான் அக்குறி எய்ததற்காக நூறுரூபாய் அடைந்தேனே நான் பிச்சைகேட்டதினாலே எனக்கு என்னகிடைத்ததென்றான் அமீரானவன் நகைத்து அவனுக்கு மேலும் அதிகமாக வெகுமதிசெய்தான்.

STORY LII.

௫௨. கதை

One night a Cazy found in a book, that whoever has a small head, and long beard, is a block-head. The Cazy, having a small head and a long beard, said to himself, "I cannot increase the size of the head, but I will shorten the beard." He sought for scissors, but could not find them. Having no other course, he took half his beard in his hand, and carried the other half towards the lamp; when the hair took fire,

ஒருநாள் இரவில் ஒருநியாயாதிபதி சிறிய தலையும் நீண்டதாடியுமுடையவன்மூடனாகவிருப்பானென்று ஒரு புஸ்தகத்திற்கண்டான் அந்தநியாயாதிபதிக்குச்சிறிய தலையும் நீண்ட தாடியுமுண்டாயிருந்தபடியால் அவன் தான் என் தலையின் அளவைப்பெரியதாகச் செய்யமாட்டேன் ஆனால் தாடியைக் குறுகச்செய்வேனென்று தனக்குள்ளேசொல்லிக்கொண்டு கத்திரிகோலைத்தேடினான் ஆனால் அது அகப்படவில்லை வேறேவகையில்லாமையினால் அவன் தன் தாடியிற்பாதியைக்கையினாற்பிடித்துக்கொண்டு மற்றைப்பாதியைவிளக்கிற் காட்டினான மயிர்பற்றிக்கொ

the flames reached his hand; upon which, letting go his hold, the beard was entirely consumed, and the Cazy overwhelmed with shame, as it verified what was said in the book.

STORY LIII.

Once upon a time, a King was sitting on the terrace of his palace; he saw a man standing close to the wall, holding out a bird in his hand. The King called him, and asked, "Why do you shew the "bird to me?" He answered, "O my lord! I laid a bet with "somebody on the part of your "Majesty, and won this bird, "which I have brought to your "presence." The King was pleased, and sent the bird to the kitchen. Two or three days afterwards, the same person came again to the King with a sheep, and said, "This sheep also I "have won in your Majesty's "name." The King accepted of it also. A third time he went to the King, accompanied by another person. The King seeing him

ண்டபின்பு அனலானது அவன் கையைக்கிட்டித்து அதற்குமேல் அவன் பிடித்துக்கொண்டிருந்த பிடியை விட்டுவிடத் தாடி முழுமையும் வெந்துபோயிற்று அப்புஸ்தகத்திற் சொல்லியிருக்கின்றது இஷ்டாந்தப்பட்டபடியால் நியாயாதிபதிமிகவும் வெட்கமடைந்தான்.

௫௩. கதை.

முற்காலத்தில் ஓரரசனானவன் தன் உப்பரிகையின் மேல் உட்கார்ந்துகொண்டிருக்கும்போது ஒருபட்சியைக் கையிலே பிடித்துக் கொண்டு சுவரினருகில் நின்றுகொண்டிருந்த ஒருவனைக்கண்டு அவனைக்கூப்பிட்டு நீ ஏன் இப்பட்சியையெனக்குக் காண்பிக்கிறாயென்று கேட்டான் அவன் ஓ என்னிறைவனே உம்முடையபட்சமாக ஒருவனிடத்தில் பந்தயம்போட்டு இப்பட்சியைச்செயித்தேன் ஆதலால் அதை உம்முடைய சமுகத்திற்குக் கொண்டுவந்தேனென்றான் அரசன் சந்தோஷப்பட்டு அந்தப்பட்சியைச் சமையல் வீட்டுக்கு அனுப்பினான் இரண்டுமூன்று நாளிற்குப்பின்பு அவன் ஒருஆட்டுடனே அரசனிடத்திற்கு மறுபடியும் வந்து இந்த ஆட்டையும் உமது பெயராலே செயித்தேனென்று சொன்னான் அரசன் அதையும் அங்கீகரித்துக்கொண்டான் மூன்றாந்தரம் அவன் தன்னோடே மற்றொருவனைக் கூட்டிக்கொண்டு அரசனி

empty-hand, asked, "Have "you not brought any thing for "me?" He answered, "I betted two thousand rupees with "this man, on behalf of your "Majesty; and having lost the "wager to him, he is come to "you for the money." The King smiled, and, bestowing on him the money, said, "Never again "play at dice with any person "on my account, for in future I "will neither receive from you "nor give you any thing."

STORY LIV.

Once on a time, a King was angry with a Poet, and ordered the executioner to put him to death in his presence. The executioner went to fetch a sword. The Poet said to the by-standers, "whilst they are bringing the sword, give me some slaps, to divert his majesty." The King smiled, and pardoned him.

டத்திற்குப்போனான் அரசன் அவனை வெறுங்கையாக இருக்கக்கண்டு நீஎன்க்கு ஒன்றுங்கொண்டு வரவில்லையாவென்றுகேட்டான் அவன் உம்முடையபட்சமாக இந்த மனிதனுடனே இரண்டாயிரம்ரூபாய்ப்பந்தயம்போட்டு அப்பந்தயத்தைத்தோற்றபடியால் அவன் உம்மிடத்தில் அப்பணத்துக்காகவந்திருக்கிறானென்றுமறுமொழி சொன்னான் அரசனுடன்சிரிப்புக்கொண்டு அப்பணத்தை அவனுக்குக்கொடுத்துவிட்டு மறுபடியும் என்னிமித்தம் ஒருவனுடனேயும் விளையாடிப்பந்தயம்போடாதேயென்னத்தினாலென்றால் இனிமேல் ஒன்றும் உன்னிடத்தில் வாங்கவும் மாட்டேன் உனக்குக் கொடுக்கவும்மாட்டேனென்றான்.

௫௪. கதை.

ஒருகாலத்தில் ஓரரசன் வித்வான் மீதிலேகோபித்துக்கொண்டு தனக்கெதிரில் அவனைக்கொலைசெய்யும்படி கொலைசெய்பவர்களுக்குக்கட்டளையிட்டான் (அப்படியே) அவர்கள் கத்தியை கொண்டுவரப்போனார்கள் (அப்போது) வித்வான். அருகிலிருப்பவர்களைப்பார்த்து அவர்கள் கத்தியைக்கொண்டுவரும்போது இராஜாவைக்கோபத்தினின்று திருப்ப என்தாடையில் சில அடிகள் அடியுங்கோளென்றான் அதற்கு இராஜா புன்சிரிப்புக்கொண்டுமன்னித்தான்.

STORY LV.

A person in a dream had an interview with the Devil, to whom he gave a slap on the face, and seizing his beard, said, "O accursed! thou art the enemy of "mankind, and, in order to impose upon us, you wear a long "beard." Upon giving him another slap he awoke, and found his own beard in his hand. He was ashamed, and laughed at himself.

௫௫. கதை.

ஒருவன் தன் கனவிலே பேயைக்கண்டு அதன் முகத்தின்மேல் ஓரறை கொடுத்து அதன் தாடியைப்பிடித்துக்கொண்டு ஓ சபிக்கப்பட்டபேயே நீ மனிதருடைய சத்துருவா யிருக்கின்றாய் எங்களை மோசம்பண்ணும்படியாக நீ நீண்ட தாடியை வைத்துக்கொண்டிருக்கிறா யென்று சொல்லி மறுபடியும் ஓரறை கொடுக்கும் பொழுது அவன் விழித்துக்கொண்டு தன் தாடியைத் தன்கையி லிருக்கக் கண்டு வெட்கமடைந்து தனக்குள்ளே நகைத்தான்.

STORY LVI.

A lion and a man saw in a house their own pictures. The man said to the Lion, "Do you behold the valour of the man, who has overcome the lion?" He answered, "The painter was a man; but if the picture had been executed by a lion, the representation would not have been after this manner."

௫௬. கதை.

ஒருசிங்கமும் மனிதனும் தங்களுடைய ரூபத்தை ஒருவீட்டில் எழுதியிருக்கக் கண்டு மனிதன் சிங்கத்தைப்பார்த்து உன்னை ஜெயித்த மனிதனுடைய பராக்கிரமத்தை பார்த்தாயா வென்றான் அதற்கு சிங்கஞ் சொன்னதாவது படமெழுதினவன் மனிதனானபடியால் அப்படியிருக்கின்றது ஆனால் அந்தப்படம் சிங்கத்தினாலெழுதப்படுமேயானாலது அப்படியாமென்றது.

STORY LVII.

A certain man went to a Dirveish, and proposed three questions. First—"Why do they "Say that God is omnipresent? "I do not see him in any place; "show me where he is." Second—"Why is a man punished "for crimes, since whatever he "does proceeds from God? Man "has no free will, for he cannot "do any thing contrary to the "will of God; and if he had "power, he would do every thing "for his own good." Third—"How can God punish Satan in "hell fire, since he is formed of "that element; and what impression can fire make on itself?" The Dirveish took up a large clod of earth, and struck him on the head with it. The man went to the Cazy, and said, "I "proposed three questions to "such a Dirveish, who flung such "a clod of earth at me, as has "made my headach." The Cazy

௫௭. கதை.

ஒருவன் ஒரு சன்னியாசியினிடத்
திற்குப்போய்மூன்றுவினாகேட்டான்
முதலாவது கடவுள் எங்குமிருக்கிறா
ரென்று என்னத்தினாலே சொல்லுகி
றார்கள் அவரைநானெந்த விடத்திலு
ம்பார்க்கவில்லையே அவரிருக்குமிடத்
தையெனக்குக்காண்பியுமென்பதாம்
இரண்டாவதுமனிதன்செய்பவையெ
ல்லாங்கடவுளிடத்திலிருந்துஉண்டா
கின்றபடியினாலே குற்றங்களுக்காகஅ
வனேன்தண்டிக்கப்படுகிறான் மனித
னுக்குச்சுயாதீனமில்லையென்னத்தி
னாலென்றால்கடவுளுடைய சித்தத்து
க்குவிரோதமாகவொன்றுஞ்செய்யஅவ
னுக்குச்சத்தியில்லை அவனுக்குச்சத்தி
யிருந்தால்தனக்குநன்மையாகஎல்லா
க்காரியமுஞ்செய்துகொள்வானேயென்
பதாம் மூன்றாவது பிசாசானது நெ
ருப்பினால் உண்டாக்கப்பட்டிருக்கி
றபடியால் அதைக்கடவுளானவர்
நரகஅக்கினியிலேதள்ளியெப்படிதண்
டிக்கமாட்டுவார்நெருப்புநெருப்பை
என்ன செய்யமாட்டு மென்பதாம்
அதற்கு அச்சன்னியாசி பெரியமண்
ணாங்கட்டியொன்றை யெடுத்து அதி
னால் அவன் தலையின் மேல் அடித்
தான் அவன் நியாயாதிபதியினிடத்திற்
குப்போய்நான் இந்தச்சன்னியாசியை
மூன்று வினாகேட்டேன் அவன் தலை
நோவும்படி என்னை மண்ணாங்கட்டி
யால் அடித்தானென்றான் நியாயாதி

having sent for the Dirveish, asked, "Why did you throw a clod "of earth at his head, instead of "answering his questions?" The Dirveish replied, "The clod of "earth was an answer to his "speech: he says he has a pain "in his head; let him show "where it is, when I will make "God visible to him: and why "does he exhibit a complaint to "you against me? whatever I "did was the act of God; I did "not strike him without the "will of God; what power do I "possess? and as he is compounded of earth, how can "he suffer pain from that element?" The man was confounded, and the Cazy highly pleased with the Dirveish's answer.

STORY LVIII.

A horseman went to a city, and, hearing there were many thieves in the place, said to his groom, at night, "Do you sleep, and I will "keep watch, for I cannot rely

பதி அச்சன்னியாசியை அழைப்பித்து
அவனுடைய வினவுக்குவிடைசொல்
லாமல் அவன் தலையின்மேல் ஒருமண்
ணாங்கட்டியை எறிந்தாயென்று
கேட்டான் அச்சன்னியாசி அந்தமண்
ணாங்கட்டி (அடியே) அவன் கேள்விக்
கு உத்தரவாம் அவன் தனக்குத் தலை
நோயுண்டாயிருக்கின்றதென்று சொ
ல்லுகிறானே அது எங்கேயிருக்கின்ற
து அந்நோவை அவன் காண்பிக்கட்டும்
அப்பொழுது சுவாமியை அவனுக்கு
நான் காண்பிக்கிறேன் அவன் உம்மி
டத்தில் என்மீது ஏன் பிரியாது செய்கி
றான் நான் செய்தவைகள் யாவுங் கட
வுளுடைய செய்கையாயிருக்கின்றன
வே நான் கடவுளுடைய சித்தமில்லா
மல் அவனை அடிக்கவில்லையே எனக்கு
என்ன சத்தியுண்டு அவன் மண்ணினா
லுண்டாக்கப்பட்டிருக்கின்றபடியா
ல் அந்தமண்ணால் அவன் வருத்தத்தை
எப்படி அடையக்கூடுமென்று மறு
மொழிசொன்னான் அந்த மனிதன்
வெட்கமடைந்தான். நியாயாதிபதி
அச்சன்னியாசியினுடைய விடைக்கா
கமிகவுஞ்சந்தோஷப்பட்டான்.

ருஅ. கதை.

ஒரு குதிரை வீரன் ஒருபட்டணத்
திற்குப்போய் அங்கே அநேகங் கள்
ளர்களிருக்கிறார்களென்று கேள்விப்
பட்டு இராத்திரியில் தன் குதிரைக்கா
ரனுடனே நீ நித்திரைசெய் நான்விழி
த்துக் கொண்டிருப்பேன் என்னத்

" on you." The groom answered, " Alas! My lord, what " words are these? I cannot " consent to be asleep, and my " master awake. Forbid it! " I will not do so." In short, the master went to sleep, and three hours afterwards awoke, when he called out to the groom; " What are you doing?" He answered, " I am meditating how " God has spread the earth upon " the water." The master said, " I am afraid lest the thieves " come, and you know nothing " of it." He replied, " O my " lord! rest satisfied, I am on " the watch." The cavalier went to sleep again, and awaking again at midnight, called, " Holloa, groom! what are " you doing? He answered " I am considering how God " has supported the sky without pillars." He replied, " I am " afraid of your meditations, " lest the thieves carry away the " horse." He replied, " O my

றிருவேனென்றான் நான் உன்னை நம்பமாட்டேனென்று சொன்னான் அவன் ஐயோ என்னிறைவனே இதென்னவார்த்தைகள் நான் நித்திரைசெய்யவும் என் எசமான் விழித்துக்கொண்டிருக்கவும் நான் சம்மதிக்கமாட்டேன் அப்படிக்கூடாது நான் அப்படிச்செய்யேனென்றான் முடிவில் அந்த எசமான் நித்திரைசெய்யப்போய் மூன்றுநாழிகைக்குப் பின்பு விழித்துக்கொண்டு அவனை நீ யென்ன செய்கிறாயென்று உரக்கக்கூப்பிட்டான் அவன் சுவாமி பூமியைச்சலத்தின்மேல் எப்படிபாவச்செய்தாரென்று ஆலோசிக்கிறேனென்றான் எசமான் திருடர்கள்வந்தால் அதைக்குறித்து உனக்கு ஒன்றுந் தெரியமாட்டாதென்று நான் பயப்படுகிறேனென்றான் குதிரைக்காரன் ஒய் என் இறைவனே சந்தேகப்படவேண்டாம் நான் விழித்துக்கொண்டிருக்கிறேன் என்றான குதிரைவீரன் மறுபடியும் நித்திரைசெய்யப்போய் நடு இராத்திரியில் திரும்ப விழித்துக் கொண்டு ஓ குதிரைக்காரா நீ என்னசெய்கிறாயென்று கூப்பிட்டான் அவன் பகவான் ஆகாசத்தைத் தூணில்லாமல் எப்படிநிறுத்தினாரென்று ஆலோசிக்கிறனென்றான் எசமான் நான் உன்னுடையஎண்ணத்தைக்குறித்துப்பய்ப்படுகிறேன் என்னத்தினாலென்றால் திருடர்கள் குதிரையைத்திருடிக்கொண்டு போவார்களென்று சொன்னான் குதி

" lord! I am a wake; how can " the thieves come?" The master said, " If you want to sleep, " go to rest, and I will keep a- " wake." He answered, " I am " not sleepy." The cavalier again went to sleep, and an hour of night remaining he awoke, and asked the groom what he was doing. He replied, " I am considering, since the thieves have " stolen the horse, whether I " shall carry the saddle upon my " head to-morrow, or you, Sir."

STORY LIX.

A Dirveish went to a miser, and wanted something of him. The miser said, " If you consent to one proposal of mine, " I will do whatever you require." The Dirveish asked what it was, and he said, " Never ask me for any thing, " and whatever else you say, " I will perform."

ரைக்காரன் ஓய் என் இறைவனே நான் விழித்துக் கொண்டிருக்கிற னே திருடர்கள் எப்படி வருவார்க ளென்றான் எசமான் நீ நித்திரை செ ய்ய வேண்டுமாகில் போய்த் தூங்கு நான்விழித்துக்கொண்டிருப்பே னெ ன்றான் அதற்கு அவன் எனக்கு நித்தி ரைவரவில்லையென்று மறுமொழி சொன்னான் குதிரைவீரன் நித்திரைசெ ய்ய மறுபடியும் போய்ப் பொழுது விடியவொருநாழிகையிருக்கும்போது விழித்துக்கொண்டு குதிரைக்காரனை நீ யென்னசெய்கிறாயென்றுகேட்டான் அவன் திருடர்கள் குதிரையைத்திருடி க்கொண்டு போனபடியால் நாளைக்கு ச்சேணத்தை என் தலையின்மேல்நான் எடுத்துக் கொண்டு போவேனோ நீர் தா மெடுத்துக் கொண்டு போவீரோ வென்று யோசனை பண்ணுகிறேன் ஐயாவென்றான்.

௫௯. கதை.

ஒரு சன்னியாசியானவன் ஒரு லோபியினிடத்திற்குப் போய் அவனி டத்திற்பிச்சைகேட்டான் அந்த லோ பி நான் கேட்கும் ஒருகேள்விக்கு நீ சம்மதித்தால் உனக்கு வேண்டியதை ச்செய்வேனென்றான் அச்சன்னியாசி அதுஎன்னவென்றுகேட்டான் அவன் என்னை ஒன்றுங்கேளாதே நீ சொல் லுகிற மற்றவைகளை யெல்லாஞ்செய் வேனென்றான்.

STORY LX.

They asked a hump bucked man, "Whether do you wish that your back was straight, or that those of other men should become crooked like your's ?" He answered, I wish that other men's backs were bent, in order that I might see them with the same eyes as they view me."

௬௰. கதை.

சிலர் ஒரு கூனனை உன்னுடைய முதுகு நிமிர்ந்திருக்கக் கோருகிறாயா அல்லது மற்றவர்களுடைய முதுகும் உன்னைப்போல் கோணலாயிருக்கக் கோருகிறாயாவென்று கேட்டார்கள் அதற்கவன் என்னையவர்கள் பார்க்கிறதுபோல் இந்தக்கண்ணினால் அவர்களை நான் பார்க்கும்படி அவர்களுடைய முதுகும் கோணலாயிருக்கக் கோருகிறேனென்றான்.

STORY LXI.

A person who was intimate with a miser, said to him one day, "I am now going a journey, "give me your ring, which I will "keep about me, and whenever "I see it, I shall remember you.' He answered, "If you want "to remember me, whnever "you see your finger naked. al- "ways think of me, that you "wanted a ring of such an one, "and he did bot give it."

௬௧. கதை.

ஒரு லோபியுடனே சிநேகஞ்செய்துகொண்டிருந்த ஒருவன் ஒரு நாள் அவனுடனே நான் இப்போது யாத்திரைபோகிறேன் உன்மோதிரத்தை எனக்குக்கொடு அதை என்னிடத்தில்வைத்துக்கொண்டு அதைப் பார்க்கும் பொழுதெல்லாம் உன்னை நினைப்பேனென்றான். அதற்கு அந்த லோபி நீ என்னை நினைக்கவேண்டுமாகில் உன் விரலானது வெறுமையாக இருக்கப் பார்க்கும் போதெல்லாம் இன்னானிடத்தில் நான் ஒரு மோதிரங்கேட்டதற்கு அவன் அதைக்கொடுக்கவில்லையேயென்றுஎன்னைஎப்பொழுதும் நினையென்றான்.

STORY LXII.

A learned man went to a city, and hearing of a munificent person of that place, who entertained travellers, he waited on him, in his old clothes, and did not meet with any kindness from the host, nor was even desired to sit down. The man of letters was confounded, and went away. The next day, he hired a neat dress, and, having put it on, went there again. The master of the house treated him with respect, seated him near himself, and had him supplied with dainty dishes. When the man of letters sat down to dinner, he took a mouthful, and put it on his clothes. The master of the house asked why he did this? when he answered, "Yesterday, I came in old "clothes, and did not get any victuals; to-day, now I am well "dressed, I conceive that the "meat is for my clothes, and not "for myself." The host was a-

௬௨. கதை.

ஒருவித்துவான் ஒரு பட்டணத்திற்குப்போய்அவ்விடத்தில்தேசாந்திரிகளுக்கு அன்னங்கொடுத்துக்கொண்டிருந்த உதாரகுணமுள்ள ஒருவனைக்குறித்துக்கேள்விபட்டுத் தனக்கிருந்த பழம்வஸ்திரங்களுடனே அவனிடத்திற்குப்போனபோது அவனாலே யாதொரு உபகாரமும் உட்காரும்படிசெய்யும் மரியாதையும் பெறாமற்போனபடியால் அக்கல்விமானானவன் வெட்கமடைந்துபோய் விட்டு மறுநாள் நல்ல வுடுப்பொன்று கொடைசகூலிக்குவாங்கிஅதைத்தரித்துக்கொண்டுஅவனிடத்திற்குமறுபடியும் போனான் அவ்வுதாரகுணமுள்ளவன் அவனுக்குமரியாதைசெய்து அவனைத்தன்னருகில் உட்காரவைத்துக்கொண்டு அவனுக்குசுவையான சாப்பாடு அழைப்பித்துக் கொடுத்தான கல்விமான் சாப்பிட உட்கார்ந்துஒருகவளத்தையெடுத்து அதைத்தன்வஸ்திரத்தின்மேல்வைத்தான் வீட்டெசமான் நீயேனிப்படிசெய்தாயென்று கேட்டான் அப்போது கல்விமானானவன் நேற்று நான் பழம்வஸ்திரங்களுடனேவந்தபோதுயாதொருஉணவும்அகப்படவில்லை இன்று நான் நன்றாயுடுத்திக்கொண் டிருக்கிறபடியால் இச்சாப்பாடகப்பட்டது அதுஎன்வஸ்திரத்துக்கேயல்லாமல் எனக்கன்றென்

shamed of himself, and made an apology.

STORY LXIII.

An ugly fellow went to a physician, and said, ' There is a boil come on the most unseemly part of me." The physician, looking at him, said, "you tell a falsehood; for I see your face, and there is no boil on it."

STORY LXIV.

A king sent an army against his enemy, and was defeated. A person speedily came to the King, and informed him that his troops had obtained the victory, and he was very much delighted, Tow days after, accounts of the defeat arrived. The Kidg wanteed to punish the man, when he pleaded thus : "O my lord ! I "do not deserve punishment, "for I made you happy for two "days ; why should you make "me the contrary ? The King was pleased with the repartee, and bestowed a gift on him.

றுநானினைக்கிறேனென்றான் அந்தவீட்டுக்காரன் வெட்கப்பட்டு அதற்குப் பரிகாரம்பண்ணிக்கொண்டான்.

௬௩. கதை.

ஒரு லெட்சணமில்லாதவன் வயித்தியனிடத்திற்குப்போய் பார்க்கத்தகாதவிடத்தில் எனக்குகட்டிபிறப்பட்டிருக்கினறதென்றான் வயித்தியன் அவனைப்பார்த்து நீ பொய்சொல்லுகிறாய் உன்முகத்தைப்பார்த்தால் (உனக்கு) கட்டியிருக்கிறதாய் காணப்படவில்லையென்று சொன்னான்.

௬௪. கதை

ஒரரசன் தன்பகைவன்மேல்சேனையை யனுப்பினான், அது தோற்படைந்திருக்க ஒருவன்சீக்கிரமாக அரசனிடத்திற்குவந்து உம்முடைய சேனை செயமடைந்ததென்று அவனுக்கறிவித்தான். அவன் மிகவுங்களிகூர்ந்தான் இரண்டுநாளிற்குப்பின்பு அது தோற்றதென்று சமாசாரம்வந்தது. அரசன் அந்தமனிதனைத்தண்டிக்கவிரும்பினான் அப்பொழுது அவன் ஓ என்னிறைவனே நான் தண்டனைக்குப்பாத்திரனல்லேன் ஏதனாலென்றால் நானும்மை இரண்டுநாள் வரைக்குஞ் சந்தோஷமடைந்திருக்கச் செய்தேனே நீயென்னை அதற்குமாறாகச் செய்யவேண்டியதென்னவென்று சொன்னான் அரசன் விவேகமுள்ள இந்தஉத்தரத்துக்காகச் சந்தோஷப்பட்டு அவனுக்கு வெகுமதிசெய்தான்.

STORY LXV.

A King asked an astrologer, how much longer he had to live? and he answered, ten years. The King was very much perplexed, and fell upon his bed as though he had been sick. The Vizier, who was a very sensible man, sent for the astrologer before the King, and asked him, "How many years of your own "life still remain?" He answered, "Twenty years." The Vizier instantly had the astrologer slain with a sword, in the King's presence. The King's mind was restored to rest: he admired the Vizier's penetration, and never again listened to astrologer.

STORY LXVI.

A person, who was going along hungry, saw an Arab eating food by the side of a pond, whom he approached and said, "I am come "from your house." The Arab asked, "My wife, child, and camel, are they all well?" He answered, "Yes." The Arab, being

௬௫. கதை.

ஒரு அரசன் ஒருசோதிடசாஸ்திரியை நான் இன்னமெவ்வளவு நாள் உயிரோடிருப்பேனென்றுகேட்டான் அவன்பத்துவருஷமிருப்பீரென்றான் அரசன்மிகவுங்கலங்கித்தனக்கு வியாதியுண்டாயிருக்கிறவனைப்போல்தன்சயனத்தின்மேல் விழுந்தான் மகாபுத்திமானாயிருந்த மந்திரி அச்சோதிடசாஸ்திரியை அரசனுக்கு முன்பாக அழைப்பித்து அவனை நீயின்னமெவ்வளவுவருஷமிருப்பாயென்றுகேட்டான் அவன் இருபதுவருஷமிருப்பேனென்றான் உடனே மந்திரிஅச்சோதிடசாஸ்திரியை ஒருகத்தியினால்அரசனுக்குமுன்பாக வெட்டுவித்தான் அரசன் மனதுதெளிமந்திரியினுடைய புத்திக்காக ஆச்சரியப்பட்டு அதுமுதற்கொண்டு சோதிடசாஸ்திரிகள்சொல்லைக் கேளாதிருந்தான்.

௬௬. கதை.

பசியுடனே நடந்துபோன ஒருவன் ஒருகுளக்கரையிலே சாப்பிட்டுக்கொண்டிருந்தஅராப்பியனொருவனைக்கண்டு அவனருகில்வந்து நான் உன் வீட்டிலிருந்து வந்தேனென்றான் அந்தஅராப்பியன் என்மனைவிபிள்ளைஒட்டகம் இவைகளெல்லாம்நன்றாயிருக்கின்றனவோவென்றுகேட்டான் அதற்கவன் நன்றாயிருக்கின்றனவென்று மறுமொழிசொன்னான் அ

satisfied, did not look again at him. The man then began saying, "O Arab! this dog, which "is now lying down in your presence, is such an one as "yours, had he been still alive." The Arab raised up his head, and said, "What was the cause "of my dog's death?" He answered, "He eat a great deal of "your camel's flesh." He asked, "How cam the camel to "die?" He replied, "Your wife "died; after which, no one gave "him either grass, corn, or wa-"ter." He asked, How came my "wife to die?" He replied, "She "wept very much in her grief "for your son, and smote her "head and breast with a stone." He asked, "How did my son "die?" He answered, "The "house fell in upon him." When the Arab heard this detail of the ruin of his family, he flung dust on his head, and went away: and by this contrivance the man got a dinner.

ராப்பியன் சந்தோஷத்தையடைந்
து அவனைமறுபடிபாராதிருந்தான் அ
ப்போது அந்தமனிதன் ஓய் அராப்பி
யனே இப்போது உனக்குமுன்னே
படுத்துக்கொண்டிருக்கிற இந்த நா
யானது இறந்துபோன உன்னுடை
ய நாயைப்போலஇருக்கின்றதென்று
சொன்னான் அராப்பியன் தன் தலையை
எடுத்துஎன் நாயினுடையமரணத்
திற்குக்காரணமென்னவென்றான் அ
வன் உன் ஒட்டகத்தின் மாம்சத்தைமி
குதியாகத் தின்றதினாலேயென்றான்.
அராப்பியன் அவ்வொட்டகம்என்ன
காரணத்தினால் இறந்ததென்றுகேட்
டான் அவன் உன்பாரியாள் மரணம
டைந்தாள் அதன்பின்பு ஒருவரும்அ
தற்குப்புல்தானியம்சலம்கொடுப்பா
ரில்லாமையாலென்றான் அராப்பிய
ன் என்பெண்சாதி என்னகாரணத்தி
னாலிறந்தாளென்றுகேட்டான் அவ
னவள் உன்குமாரனுடையமரணத்து
க்காகச்சோகமடைந்து மிகுதியாக
அழுது ஒருகல்லினால் தன் தலையிலும்
மார்பிலுமிடித்துக்கொண்டதினாலெ
ன்றான் அராப்பியன் என்மகன்எப்ப
டியிறந்தானென்றுகேட்டான் வீடி
டிந்தவன்மேல் விழுந்ததினாலென்றா
னிப்படி தன்சமுசாரம் அழிந்தவித
த்தைக்கேட்டபோது அந்த அராப்
பியன் தன் தலையின்மேலே புழுதியை
(வாரி) எறிந்துகொண்டு போய்விட்
டான் இந்தஉபாயத்தினால்அந்தமனி
தனுக்குப்போசனங்கிடைத்தது.

STORY LXVII.

A miser said to a friend, "I "have now a thousand rupees, "which I will bury out of the "city, and I will not tell this se-"cret to any one besides your-"self." In short, they went out of the city together, and buried the money under a tree. Some days after, the miser went alone under the tree, but found no signs of his money. He said to himself, "Excepting that friend, no "other has taken it away: but if "I question him, he will ne-"ver confess." He therefore went to his house, and said, "A "great deal of money is come to "my hands, which I want to put "in the same place; if you will "come to-morrow, we will go to-"gether." The friend, by coveting this large sum, replaced the former money, and the miser the next day went there alone, and found his money. He was delighted with his own contrivance'

௬௰௭. கதை.

ஒருலோபியானவன் தன்சிநேகிதனொருவனோடு இப்போது என்னிடத்தில் ஆயிரமரூபாயிருக்கின்றன அவைகளை நான் இப்பட்டணத்துக்குவெளியே புதைப்பேன் இந்தரகசியத்தை உனக்கல்லாமல் மற்றொருவருக்குஞ்சொல்லேனென்றான். கடைசியில் இவர்களிருவருங் கூடிக்கொண்டுபட்டணத்திற்குவெளியேபோய் அப்பணத்தை ஒருமரத்தின்கீழ்ப்புதைத்தார்கள் சிலநாளிற்குப்பின்பு அந்தலோபியானவன் தனிமையாக அம்மரத்தடியிற்போய்த் தன்பணத்தைக்காணாமையால் அந்தச் சிநேகிதன்தவிர மற்றொருவனும் அதையெடுத்திருக்கமாட்டார்கள் ஆயினும் நானவனைக்கேட்டால் அவன் சொல்லமாட்டானென்று தன்னுட்சொல்லிக்கொண்டு அவன்வீட்டுக்குப்போய் என்னிடத்தில் அநேகதிரவியம் வந்திருக்கின்றன, அவையும் அவ்விடத்திலேயே புதைத்துவைக்கவிரும்புகிறேன் நாளைக்குநீவந்தால் நாமிருவருஞ்சேர்ந்துபோவோமென்றான் அச்சிநேகிதன் இந்தமிகுந்த திரவியத்தைவிரும்பமுன்பணத்தைத்திருப்பிப்புதைத்துவிட்டான் உலுத்தன் மறுநாள் தனிமையாக அந்தவிடத்திற்குப்போய்த் தன்பொருளைக்கண்டு தான்செய்த உபாயத்துக்காகச் சந்தோஷப்ப

and never again placed any confidence in friends.

டுஅதுமுதற்கொண்டு சிநேகரிடத்தில் எவ்வளவும் விசுவாசம்வையாமலிருந்தான்.

STORY LXVIII.

Two painters agreed together to paint each a picture, to prove which was the best artist. One having painted a bunch of grapes, and hung it over his door, the birds came and picked at it with their beaks. People highly commended this picture, and went to the house of the other, and asked where he had drawn his picture? He answered, "Behind this curtain." The first painter wanted to pull bach the curtain; but when he laid his hand upon it, he discovered the deception, and that it was the wall, upon which the other had painted a curtain. The other painter said, "You drew such a picture as deceived the birds, but my performance has deceived even an artist."

௬௰௮. கதை.

இரண்டுசித்திரக்காரர்கள் தம்மில் மிகவும் நல்லவேலைக்காரன் இன்னானென்றறியும்படியாக அவனவன் தனித்தனியே ஒவ்வொருபடமெழுத நிச்சயித்துக்கொண்டார்கள். ஒருவன் ஒருதிராட்சப்பழக்குலையை எழுதி அதைத்தன்கதவின்மேலே தொங்கக்கட்டினான் அதைப்பறவைகள்வந்து மூக்கினாற்கொத்தின, சனங்களோ அந்தப்படத்தை மிகுதியாக மெச்சி மற்றொருவனுடைய வீட்டிற்குப் போய்நீஉன்சித்திரத்தை எவ்விடத்திலெழுதினாயென்றுகேட்டார்கள் அதற்கவன் இந்தத்திரையின்பின் னெழுதினேனென்று சொன்னான். முன்சொல்லிய சித்திரக்காரன் அந்தத்திரையைத்தனக்குப்பின்னாகவிழுக்கவிரும்பிப்பிடித்தபோது அதை அச்சித்திரக்காரன் கபடமாகச்சுவரில்திரைரூபமாக எழுதினதென்று கண்டான் அப்போது அவன் நீபறவைகளைமோசம்பண்ணும்படியான ஒருசித்திரத்தையெழுதினாய் ஆனால்நானெழுதியதோ சித்திரக்காரனைக்கூடமோசம்பண்ணிற்றென்றான்.

STORY LXIX.

A King ordered a blacksmith

௬௰௯. கதை.

ஓரரசன் தனக்குநல்லவொருசேர

to make him a good suit of armour. When it was ready the man carried it to the King, who, in order to try it, laid it on the ground, and struck it with a sword, which cut it asunder. He told the blacksmith that if he made any more such armour, he would sever his head from his body. The man went home, and having a daughter, told her these circumstances. The daughter advised him to make another armour, and which she would herself carry to the King. In short, the blacksmith made the armour, which the daughter put on, and with a sword in her hand went to the King, and told him now to try it. The King asked her why she put it on? She answered, "O "my lord! it is usual to try ar- "mour while on the body; on "which account I have dressed "myself in it." The King, Pleased at her speech, bestowed on her a gift.

டுஇருப்புக்கவசஞ்செய்யும்படி ஒரு
கருமானுக்கு உத்தரவு பண்ணினான்.
அவன் அதைச்செய்து முடித்தவுட
னே அரசனிடத்திற்குக் கொண்டுவந்
தான் அரசனதைப் பரிக்ஷிக்கும்படி
யாகப்பூமியின்மேல்வைத்துக் கத்தி
யினால்வெட்டினான் அது துண்டு துண்
டாகப்போயிற்று அரசன் அக்கருமா
னுடனே இனிமேல்நீஇப்படிப்பட்ட
கவசஞ்செய்தாயாகில் நான் உன் தலை
யை வெட்டிப்போடுவே னென்று
சொன்னான் அவன்வீட்டிற்குப்போ
ய்த்தனக்கு ஒருகுமாரத்தியிருந்தப
டியால் அவளுடனே இக்காரியங்களை
ச்சொன்னான் அவள் அவனுடனே மற்
றொருகவசஞ்செய அதை அரசனிடத்
திற்குநானே கொண்டுபோவே னெ
ன்றாள் கடைசியில் அந்தக்கருமான்க
வசஞ்செய்துகொடுக்க அவன் குமார
த்தி அதைத்தரித்துக்கொண்டு தன்
கையிலொருகத்தியுடனே அரசனிட
த்திற்குப்போய் அவனுடனே இப்
போது இதைப்பரிக்ஷியுமென்றாள் அ
ரசன் நீயேன் இதைத்தரித்துக்கொ
ண்டாயென்று கேட்டான் அவள்ஐய்
என்னிறைவனே கவசத்தைச் சரீரத்
தின்மேலிருக்கும்போது சோதித்த
ல்வழக்கம்ஆதலால் அதை நான்தரித்
துக்கொண்டேனென்றாள். இப்படி
அவள்சொன்னதற்காக அரசன் சந்
தோஷித்து அவளுக்கு ஒருவெகும
திசெய்தான்.

STORY LXX.

Once on a time, a King went to take an airing, accompanied by his Vizier. They came to a field, and saw some plants of wheat higher then a man. The King wondered, and said he had never before seen such long stalks of wheat. The Vizier said, "O my lord! "in my country the wheat grows "as high as an elephant." The King smiled. The Vizer said to himself that the King thought he had told an untruth, and therefore had smiled. When they returned from their excursion, he sent a letter to some people of his country for some plants of wheat; but, by the time his letter arrived, the wheat harvest was over. A year after the plants of wheat arrived from thence, and the Vizer presented them to the King; who asked why he had brought them? He said, "One day last year I "had represented that plants of "wheat grew as high as an "elephant; and as you smiled, I "conceived that you doubted my "veracity: I therefore brought

௭௰. கதை.

பூர்வகாலத்திலொரு அரசனானவன் தன்மந்திரியுடனே உலாவப்போனான் அவர்கள் ஒரு கழனியினிடத்திலே வந்தபோது மனிதனைப்பார்க்கிலும் அதிக உயரமாக வளர்ந்திருந்த சிலகோதுமைப்பயிரைக்கண்டார்கள் அரசன் ஆச்சரியப்பட்டு நானிதற்குமுன்னமே இவ்வளவு நீண்டகோதுமைத்தாள்களைப்பார்த்ததில்லையென்றான். மந்திரி ஓய் என்னிறைவனே நான்பிறந்த ஊரிலே கோதுமையானது யானையளவு உயரம் வளருகின்றதென்றுசொன்னான். அரசன் புன்சிரிப்புக்கொண்டான். மந்திரி நான்பொய்சொன்னேனென்று நினைத்தல்லவோ அரசன் புன்னகைசெய்தானென்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான் இவர்கள் உலாவித்திரும்பிப்போனவுடனே மந்திரி சிலகோதுமைத்தாள்களைக்கொடுத்தனுப்பும்படியாகத் தான்பிறந்த ஊரிலிருக்குஞ் சிலருக்கு ஒருகாகிதமெழுதி அனுப்பினான் ஆனால் அவன்காகிதம்போய்ச்சேரும்போது கோதுமை அறுப்புக்காலம் ஆயிற்று ஆதலால் ஒருவருஷத்திற்குப்பின்பு கோதுமைத்தாள்கள் அவ்விடத்திலிருந்து வந்தன. மந்திரி அவைகளை அரசனுக்குக்காண்பித்தான் அரசன் மந்திரியை நீஎன் இவைகளைக் கொண்டுவந்தாயென்று

" them, to prove the truth of my " assertion." The King replied, " I now believe your words; but " take care, another time, not to " speak what you cannot obtain " credit for before the expiration " of a year."

கேட்டான் மந்திரி போனவருஷத்தில் ஒருநாள் கோதுமைப்பயிர் யானையளவு உயரம் வளருகின்றதென்று நான் சொன்னேன் அப்போது நீர் புன்னகைகொண்டபடியால் நான் சொல்லியதின் உண்மையைக் குறித்துச் சந்தேகப்பட்டீரென்று நினைத்தேன் ஆதலால் நான் சொல்லியது உண்மையென்று ரூபிக்கும்படியாக இவைகளைக்கொண்டுவந்தேனென்று சொன்னான் அரசன் நானிப்பொழுது உன் வார்த்தைகளை நம்புகிறேன். ஆனால் ஒருவருஷஞ் செல்லுதற்கு முன்னே நீ ரூபிக்கக்கூடாததைக்குறித்து இனி ஒருசமயத்திலுஞ் சொல்லாதிருக்கச் சாக்கிரதையாக இருவென்றான்.

STORY LXXI.

One day a thief went to the dwelling of a certain person, in order to steal a horse. He happened to be seized; and the owner of the horse told him, that if he would shew how he contrived to steal a horse, he should be released. He consented, and approached the horse and cast off the heel-ropes, he then put the bridle in his mouth, after which he mounted, and, putting the horse in full speed, called out,

எக. கதை.

ஒருநாள் ஒருதிருடனானவன் ஒருகுதிரை திருடும்படியாக ஒருவன் வீட்டுக்குப்போய் அகப்பட்டுக்கொண்டான் அக்குதிரையையுடையவன் நீ குதிரை திருடும்படியாகச் செய்யுமுபாயத்தைக்காண்பித்தால் நான் உன்னை விட்டுவிடுவேனென்று அவனுடனே சொன்னான் அவனதற்குச் சம்மதித்து அக்குதிரையினருகில்வந்து காற்கயிற்றை அவிழ்த்துவிட்டு அதின் வாயிலே கடிவாளத்தைமாட்டிப் பின்பு அதின்மேலேறி அதைமதிவேகமாக விட்டுக்கொண்டு நான் திருடுகிறவிதமிப்படிதானென்றுகூவினான், ச

" Behold ! this is the way that I " steal ;" and all that the people could do in pursuit of him, they could not come up with him.

ணங்கள் அவனைப் பிடிக்கும்படியாக எவ்வளவுபிரயாசப்பட்டும் அவனைப் பிடிக்கமாட்டாமற்போனார்கள்.

STORY LXXII.

A very poor man, who had a horse, tied him in the stable, with his head towards that part where it is usual to place the tail. He then proclaimed aloud, " O you " people, come and see a strange " sight, a horse with his head " where his tail ought to be !" All the people of the city crowded together, and from every one who wished to go into the stable to see the show, he exacted a small piece of money, and gave them admittance ; and they who went into the stable, came back ashamed, and said nothing.

௭௨. கதை.

ஒருகுதிரையை யுடைத்தாயிருந்த மிகவுந்தரித்திரனாகிய ஒருவன் அதை லாயத்திலேவழக்கத்துக்குமாறாகவால்பக்கமிருக்கவேண்டிய விடத்திலே தலைப்பக்கமிருக்கத் திருப்பிக்கட்டிப்பின்புஜனங்களேவாலிருக்கவேண்டியவிடத்திலே தலையையுடைத்தாயிருக்கிறகுதிரையின் ஆச்சரியமான காட்சியைவந்துபாருங்களென்று உரத்தசத்தமாகச்சொன்னான் அப்பட்டணத்திலுள்ளோரெல்லாருந் திரளாகக்கூடினார்கள் இந்தக்காட்சியைப்பார்க்கும்படியாக அந்தலாயத்துக்குள்ளேபோகவிரும்புவோரெல்லாரிடத்திலுங் கொஞ்சம்பணம் வாங்கிக்கொண்டுஅவர்களையுள்ளேவிட்டான் அந்த லாயத்துக்குள்ளே போனவர்கள் வெட்கமடைந்து திரும்பிவந்துஒன்றுஞ்சொல்லாதிருந்தார்கள்.

STORY LXXIII.

A person asked Plato, " As " you have been years in ships, " and performed sea voyages, " what wonders have you seen in " that element ? He answered, " The most wonderful thing of all

௭௩. கதை.

ஒருவன் பிளாத்தோ என்பவனை நீநெடுவருஷகாலமாகக்கப்பலேறிக்கடலில் யாத்திரைபண்ணினபடியால்அதில்நீயென்னென்ன ஆச்சரியங்களைக்கண்டீரென்றுகேட்டான் அதற்கவன் எல்லாவற்றிலும் அதிகவாச்ச

"was, that I got again on shore "in safety."

STORY LXXIV.

A certain King had a wise Vizier, who resigned his office, and employed himself in worshiping God. The King asked the Nobles what was become of the Vizier? They answered, that, having quitted the Vizarut, he employed himself in serving the Deity. The King went to the Vizier, and asked, "O Vizier, what "offence have I committed, that "you quitted the Vizarut?" He answered, "For five reasons. "First—You were sitting, and "I standing in your presence; "now, I serve God, who has com- "manded me to sit at the time of "prayer. Second—You ate, whilst "I was looking on; now, I have "found a providence, who eateth "not himself, but sustains me. "Third—You slept, whilst I "watched; now, I have a God "who protects me whilst I rest. "Fourth—I was always afraid, "that if you should die, I might

ரியம் நான் மறுபடியுஞ் சுகமாகக்கரையில்வந்து சேர்ந்ததுதா னென்று மறுமொழிசொன்னான்.

௭௪. கதை.

ஓரரசனிடத்தில் விவேகமுடையவனொருமந்திரியிருந்தான் அவன் தன்னுத்தியோகத்தைவிட்டுக் கடவுளுக்காராதனைசெய்துக்கொண்டுவந்தான் அரசன்மந்திரிஎங்கேயென்று பிரபுக்களைக்கேட்டான் அவர்கள் மந்திரிஉத்தியோகத்தைவிட்டுவிட்டுப் பகவானுக்குப் பணிவிடைசெய்துகொண்டிருக்கிறானென்றார்கள் அரசன் அந்தமந்திரியினிடத்திற்குப்போய் ஓய் மந்திரியே நீ மந்திரி யுத்தியோகத்தைவிட்டுவிடும்படிக்கு நான் உனக்கு என்ன குறைவுசெய்தேனென்று கேட்டான் அவன் ஐந்துகாரணத்திற்காக நானதைவிட்டுவிட்டேனென்றான் முதலாவது நீர்உட்கார்ந்துகொண்டிருந்தீர் நான் உம்முடைய சமுகத்திலே நின்றுகொண்டிருந்தேன் இப்போதுகடவுளுக்குப்பணிவிடைசெய்துகொண்டிருக்கிறேன் அவரோ செபம்பண்ணுகையில் உட்காரும்படி எனக்கருளிச்செய்திருக்கிறாரென்பதாம் இரண்டாவது நான் பார்த்துக்கொண்டிருக்கையில் நீர்புசித்தீர் இப்போதேதான்சாப்பிடாமல் என்னைக்காப்பாற்றுகின்றதேவன் எனக்குக்கிடைத்திருக்கிறாரென்பதாம். மூன்றாவது நான்

" experience some misfortune " from enemies; now, I have such " a God who will not die, neither " can enemies do me any injury. " Fifth—With you I was afraid " that, if I should have commit- " ted a fault, you would not have " forgiven me; but, now, my " God is so merciful, that I com- " mit an hundred sins every day, " and he pardons me."

விழித்துக்கொண்டிருக்கையில் நீர் நித்திரைசெய்தீர் இப்போதோ நான் நித்திரைசெய்யும்பொழுது என்னைக் காக்கின்ற ஒருகடவுளை உடையவனாயிருக்கிறேன் என்பதாம். நாலாவது நீர்மரணமடைந்தால் நான சத்துருக்களால் யாதொருதுன்பத்தையனுபவிக்கவேண்டுமென்றெப்பொழுதும் பயந்திருந்தேன் இப்போதோ சாவில்லாத ஒருகடவுளையுடையவனாயிருக்கிறேன் பகைவர்களும் எனக்குயாதொருபொல்லாங்குஞ் செய்யமாட்டார்கள் என்பதாம். ஐந்தாவது ஒரு குற்றஞ்செய்தால் நீர் என்னைமன்னிக்கமாட்டீரென்று உம்மிடத்தில் பயந்திருந்தேன் ஆனால் இப்போதோ என் கடவுளானவர் நான் தினந்தோறும் நூறுகுற்றங்கள்செய்தும் என்னை மன்னிக்கத்தக்க இரக்கமுள்ளவராயிருக்கின்றார் என்பதாம்.

STORY LXXV.

One day a person said to himself, " Every thing is for me; God " created me very great." At that instant a flea settled on his nose, and said, " Such pride does " not become you; because what- " ever is on the earth, or in hea- " ven, God created for your use,

௭௫. கதை.

ஒருநாளொருவன் சகலமும் எனக்காகவே(உண்டாக்கப்பட்டு)இருக்கின்றன கடவுள் என்னைமிகப்பெரியவனாகச்சிருட்டித்தாரென்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான் அத்தருணத்தில் ஒரு ஈயானது அவன்மூக்கின்மேல் உட்கார்ந்துகொண்டு இப்படிப்பட்ட பெருமை உனக்குத்தகாது எதனாலென்றால் பூமியிலும்வானத்திலுமிருக்கின்ற யாவற்றையுங் கட

" and you for my service: do you " not know that I am greater than " you?"

STORY LXXVI.

It is related, that Sultan Mahmood had a great regard, for his slave Iyaz, on which account all the officers of state envied him, and said to the King, " Behold, " Iyaz goes every day into the " Jewel-office alone! and what " business has he there?" The King said, " Whenever I shall see it with my own eyes, I shall believe it." The next day they informed the King that Iyaz was gone into the Jewel-office. The King looked into the Jewel-office through a window, and what did he see but Iyaz! who, having opened a chest, had dressed himself in old dirty clothes. The King entered, and asked why he had put on such a dress? He answered, " O my " lord! before I was in your Ma- " jesty's service, I had such

வுள் உனக்கு உபயோகமாகச் சிருட்டித்து உன்னை எனக்கு உபயோகமாகச்சிருட்டித்தார் நான் உன்னிலும் பெரியதென்று உனக்குத்தெரியாதாவென்றது.

௭௬ கதை.

அரசனாகிய மாமூதென்பவன் தன்னடிமையாகிய இயாசென்பவன் மேல்மிகவும் பட்சமுள்ளவனாயிருந்தானென்றுசொல்லுகிறார்கள் ஆதலால் அரண்மனை உத்தியோகஸ்தரனைவரும் அவன்மேல்பொறாமைகொண்டு அரசனோடு இயாசு தினந்தோறுந் தனிமையாக ஆபரணவறைக்குட்போகிறான் பாரும் அவனுக்கவ்விடத்தில் என்ன வேலையென்றுசொன்னார்கள் அரசன் அதை என்கண்ணினாலே பார்ப்பேனாகில் நம்புவேனென்றான் மறுநாள் அவர்கள இயாசு ஆபரணவறைக்குப்போனானென்று அரசனுக்கறிவித்தார்கள் அரசன் ஒரு சாளரத்தின்வழியாக அந்த ஆபரணவறைக்குள்ளே பார்க்கும்போது இயாசென்பவன் ஒரு பெட்டியைத்திறந்து அழுக்குள்ளபழம்வஸ்திரங்களைத் தரித்துக்கொண்டதைக்கண்டு உள்ளேபோய் நீ ஏனிப்படிப்பட்ட உடையைத்தரித்துக்கொண்டாயென்று கேட்டான் அவன் ஓ என்னிறைவனே நான் உம்முடைய ஊழியத்துக்கு வருமுன்னே இப்படிப்பட்ட வஸ்திரந்தான் எனக்கிருந்த

" clothes as these; and now that " through your royal bounty I have good clothes, I look every " day at my old garments, and " put them on, that I may not for- " get my original state, and at " the same time hold in grateful " remembrance the bounty of my " Sovereign." When the King heard this answer, he applauded him, folded him in his arms, and in creased his rank·

FINISH.

துஇப்போது உம்முடைய தயாளத்தினால்எனக்கு நல்லவஸ்திரங்கள் கிடைத்திருக்கிறபடியினால் என்முன் நிலைமையைமறவாதிருக்கும்படியாகவும் என்னரசனாகிய உம்முடையதயாளத்தைநன்றியறிதலோடு நினைத்துக்கொண்டிருக்கும்படியாகவுந் தினந்தோறும்என்பழம்வஸ்திரத்தைப்பார்த்துக்கொள்ளுகிறே னென்றான் அரசன் இச்சொல்லைக் கேட்டபொழுது அவனைப்புகழ்ந்து கட்டியணைத்துக்கொண்டு அவனை உத்தியோகத்திலுயர்த்தினான்.

முற்றிற்று.